**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.3/2023-ன் அசல் வழக்கு எண்.272/2015</u>**

1. பக்தவச்சலம்
2. பரந்தாமன் ..மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சுரேஷ்
2. கிருஷ்ணன்
3. நாகன்
4. வட்டாட்சியர், செய்யாறு.
5. கோட்டாட்சியர், செய்யாறு.
6. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை.
7. சார்பதிவாளர், தூசி.
8. மாவட்ட பதிவாளர், செய்யாறு. .. எதிர்மனுதாரர்கள்/வாதி மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகள்

இம்மனு 17.07.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.S. சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.P. சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதத்தைக் கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1-A(3) மற்றும் பிரிவு 151ன் கீழ் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக ஏற்று உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனு சுருக்கம்:-**

மனுதாரர் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி. 2ம் பிரதிவாதிக்காகவும் தாக்கல் செய்வதாகவும், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் அவசியமான ஆவணங்கள் என்றும், இந்த ஆவணங்கள் மற்ற ஆவணங்களுடன் கலந்து கொண்டதால் உரிய காலத்தில் மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், எனவே தற்போதுதான் மனுவில் கண்டுள்ள ஆவணம் கிடைக்கப்பெற்றது, அதனால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும், அந்த காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்று உத்தரவிட வேண்டும் என்றும், இல்லையென்றால் மனுதாரர்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார்கள் என்றும், எனவே தங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் என்றும், எனவே காலதாமதமாக ஆவணங்கள் தாக்கல் செய்வதை மன்னித்து இம்மனுவை அனுமதிக்குமாறு மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் எதிருரையின் சுருக்கம்:-**

(i). மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனு பொய்யானது, மோசவிதமானது, சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றும் மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை பெற வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்கள் எவ்வாறு வழக்கிற்கு அவசியமானது என்பதனை தெளிவுபடுத்தாமலும், எப்போது ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது என்ற விவரத்தினை தெளிவுபடுத்தாமலும் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று.

(ii). மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள 1வது ஆவணமானது ஒப்படைப்பு உத்தரவின் நமுனா இவ்வழக்கிற்கும் இந்த ஆவணத்திற்கும் என்ன சம்மந்தம் என்பதனை தெளிவுபடுத்தாமல் தாக்கல் செய்துள்ள ஆவணமானது ஏற்புடையதல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள 3வது ஆவணமானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தினை மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் மூலம் அந்த ஆவணத்தினை வழங்கிய தகவல் அறியும் உரிமைச்சட்ட அலுவலரால் தான் குறியீடு செய்ய முடியும், 2 மற்றும் 4 முதல் 8

ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முந்தைய ஆவணங்கள் என்றும், இவ்வழக்கிற்கு முன் தேதியிட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யும்போதே தாக்கல் செய்திருக்கலாம், அதை விடுத்து தற்போது காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதற்கான காரணம் ஏற்புடையதல்ல. மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் மனுவில் ஆவணங்கள் பெற வேண்டுமென குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற மற்றும் தேவையற்ற ஆவணங்கள்.

(iii). மேலும் எதிர்மனுதாரர்/வாதியை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், எதிர்மனுதாரர்/வாதி தீர்ப்பின் பலனை பெற்றுவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கோடும் மேற்படி வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கோடும் நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடிக்கும் நோக்கோடும் மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும், எனவே மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரரின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

5. கற்றறிந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுவோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு அவசிய ஆவணங்கள் என்றும், இந்த ஆவணங்கள் உரிய நேரத்தில் மற்ற ஆவணங்களோடு கலந்துவிட்ட காரணத்தால் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுவோடு தாக்கல் செய்துள்ள இந்த ஆவணங்கள் ஏற்புடையதல்ல, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில்

ஒப்படைப்பு நமூனா இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாதது மற்றும் 2 மற்றும் 4 முதல் 8 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முந்தைய ஆவணம் என்றும், உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணம் ஏற்புடையதல்ல என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 3வது ஆவணம் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே அந்த ஆவணம் ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறும் வாதிட்டார்.

7. **தீர்வு :-**

இருதரப்பு வாதம் மற்றும் மனுக்கள் ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், இந்த மனுவின் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வழக்கை நடத்த தேவையான ஆவணங்கள் தற்போதுதான் அவை கிடைக்கப்பெற்றதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த ஆவணங்கள் மனுதாரர்களின் வழக்கை நிரூபணம் செய்ய அவசிய ஆவணங்கள் என்றும், எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றும் வழக்கை காலதாமதப்படுத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

8. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய்கையில் வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்டுள்ள அசல் ஒப்படை நமூனா அந்த ஆவணம் தாவா சொத்து சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று கூறப்பட்டுள்ள கூற்று ஏற்புடையதாக இல்லை. 2 மற்றும் 4 முதல் 8 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே மனுதாரர்கள் வசம் இருந்துள்ளது என்றும், அதை உரிய நேரத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் பிற ஆவணங்களோடு கலந்துவிட்டதால் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தரப்பு கூற்று ஏற்புடையதாக உள்ளது.

9. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நகல்கள் பெற்றுள்ளதால் உரிய அதிகாரி மூலம் குறியீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள ஆட்சேபனை ஆவணக் குறியீட்டின்போது பரிசீலிக்கப்பட வேண்டியது. மேலும் மேற்படி ஆவணங்கள் அனைவருக்கும் பொதுவான ஆவணங்கள். அந்த ஆவணங்களின் நகல்கள் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது தரப்பினரின் அது குறித்து சாட்சியம் அளிக்கலாம். எனவே எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனை ஏற்புடையதாக இல்லை.

10. மேலும் மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் பிற ஆவணங்களோடு கலந்துவிட்ட காரணத்தினால் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறப்பட்டுள்ள சங்கதி ஏற்கும் நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் இவ்வழக்கிற்கு எவ்வகையில் ஏற்புடையது என்பது குறித்து இருதரப்பு சாட்சியத்தின் போதுதான் இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலும். மேலும் மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய தேவைப்படும் ஆவணங்கள் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது, அவை எவ்வகையில் இவ்வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்பது குறித்து சாட்சிய விசாரணை மூலம்தான் தெரிய வரும். மேலும் மேற்படி ஆவணங்கள் அசல் ஆவணங்கள். இம்மனு தள்ளுபடி செய்யும் பட்சத்தில் மனுதாரர்கள் தங்களுடைய தரப்பை முன் வைக்க இயலாத நிலை ஏற்படும். எனவே நீதியின் நலன்பால் இருதரப்பு விசாரணையை முழுமையாக மேற்கொள்ள இம்மனுவோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொண்டால் தான் இவ்வழக்கு மனுதாரர்/பிரதிவாதி தங்கள் கட்சியை நீதிமன்றத்தில் முழுமையாக நிரூபணம் செய்ய ஏதுவாக இருக்கும் எனும் மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது.

11. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நீதிமன்ற கோப்பிற்கு நீதியின் நலன்பால் மனுதாரர்கள் தங்கள் தரப்பு கட்சியை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பு அளிக்க ஏற்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு மனுவின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2023-ம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>:-**

- இல்லை -

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.